Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

# சங்ககால இசை கலைஞர்களின் வாழ்வியல்

**ப. நந்தினி**
**தமிழாய்வுத்துறை, கொங்கு கலை, அறிவியல் கல்லூரி,**
**வெண்ணைமலை- கரூர்.**
**E-Mail: nanthinitamil4@gmail.com**

7

**ஆய்வுச் சுருக்கம்:-**

சங்க காலச் சமூகம் ஏறக்குறைய கி.மு 300 முதல் கி.பி 200 வரையிலான காலகட்டத்தில், பல சமூக அமைப்புகளுடன் விளங்கியது. பேரரசர்களும், சிற்றரசர்களும், வள்ளல்களும் வாழ்ந்த காலகட்டத்தில், தன் வறுமை நிலையைப் போக்கிக்கொள்ள, புலவர்களுக்கு அப்பாற்பட்ட, ஒரு சில நாடோடிக் கூட்டம் சுற்றி திரிந்துள்ளனர். இந்த நாடோடிக் கூட்டம் மன்னர்களைத் தேடியும், வள்ளல்களைத் தேடியும் அலைந்து திரிந்து,அவர்களைப் பாடி பரிசில் பெற்று வாழ்ந்துள்ளனர்.அவ்வாறு வாழ்ந்த நாடோடிக் கலைஞர்களைப் பற்றி, இக்கட்டுரைகண் காணலாம்.

**திறவுச் சொற்கள்**:- பாணர், ஆற்றுப்படை, விறலியர், யாழ் , பத்துப்பாட்டு.

**முன்னுரை:-**

சங்க கால சமூக அமைப்புகளுடன், தங்கு தடையின்றி இயங்கிவர்களாக புலவர்களும் கலைஞர்களும் இருந்துள்ளனர். நாடோடிக் கலைஞர்களாக சங்க இலக்கியம், பாணர், பாடினி, பொருநர், கூத்தர், விறலியர்,அகவுநர் போன்ற கலைஞர்களைக் கூறியுள்ளது. இவர்கள் எங்கும் வேர் ஊன்றாமல், தம் சுற்றத்தினருடன் அலையும் குழுவினராக வாழ்ந்துள்ளனர். மன்னன் புகழைப்பாடும் பாடாண் திணைப் பாடல்களுக்கு உரிய ஒரு துறையாக இந்த ஆற்றுப்படை துறை அமைகிறது. இவற்றுள் நாடோடிக் கலைஞர்களைப் பற்றிய குறிப்புகள் காணக்கிடைக்கின்றன.

**அக இலக்கியத்துறையில் கலைஞர்கள்: -**

சங்க இலக்கியத்தில் ஆற்றுப்படைத் துறைகளைத் தவிர்த்து, அக இலக்கியங்களிலும் கலைஞர்கள் கூறப்பட்டுள்ளனர்.

(1) “அக இலக்கியத் துறைகளிலும், கலைஞர்கள் பயன்படுத்தப்பட்டுள்ளனர். தலைவன் தலைவி, பரத்தை ஆகியோருக்கு தூது செல்லும் வாயில்கள் பட்டியலில்.கலைஞர்களுக்கு இடம்

உண்டு” (1) (பக்தவத்சல பாரதி – 2017)

(2) “தோழி தாயே பார்ப்பான் பாங்கன்
பாணன் பாட்டி இளையர் விருந்தினர்
கூத்தர் விறலியர் அறிவர் கண்டோர்
யாத்த சிறப்பின் வாயில்கள் என்ப”(2)

(தொல் கற்பியல் 52)

இந்த வாயில்களில் மிக நீண்ட தூரம் பயணம் செய்து செய்திகளைக் கூறுவதற்கு உரியவராக பாணர்களும், கூத்தர்களும் ,கூறப்பட்டுள்ளனர். இதனை, தொல்காப்பியத்தில் கற்பியலில் வரும் 28 நூற்பா விளக்குகிறது.

(3) “நிலம் பெயர்ந்து உரைத்தல் அவள்நிலை உரைத்தலி
கூத்தர்க்கும் பாணர்க்கும் யாத்தவை உரிய” (3)

(தொல் கற்பியல் 28)

மற்ற கலைஞர்களைக் காட்டிலும் கூத்தரும், பாணரும், நாடு நாடாக அலையும் தன்மையினர். எனவே இவர்களுக்கு வழியறிவும், பயணிக்கும் திறமையும் அதிகம் என்பதால் இவர்கள் வாயில்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு உள்ளனர்.

**போர்க்களத்தில் கலைஞர்கள்:-**

கலைஞர்கள் பொதுவாக சுற்றத்துடன் சூழ்ந்து அலைந்து வாழும் வாழ்வினை மேற்கொண்டுள்ளனர். போர்க்களத்தில் பெண்கள் சிறுவர்கள் உள்ளிட்ட கலைஞர்கள் கூட்டம் இருந்துள்ளதை புறநானூற்று பாடல் ஒன்று சுட்டியுள்ளது.

(4) “சிறாஅர் துடியர் பாடுவன் மகாஅர்
தூ வெள்ளறுவை மாயோற் குறுகி
இரும்புட் பூச லோம்புமின்” (4)

(புறம் 291)

(5) “பத்துப்பாட்டு ஆற்றுப்படை இலக்கியங்கள்
ஆண்களும் பெண்களும் அடங்கிய பெருஞ்சுற்றத்தினராக
கலைஞர்கள் பயணம் செய்தமையை விரியப் பேசுகின்றன” (5)

(பக்தவத்சல பாரதி -2017)

பாடினி மன்னன் போர்களத்தில் படையெடுத்ததைக் கண்டு பாடுவதாகப் புறநானூற்று பாடல் ஒன்று தெரிவிக்கின்றது. இதனால் பாடினியர் போர்க்களம் சென்றுள்ளனர், என்பதை அறிய முடிகிறது.

(6)” விசிபிணி கொண்ட மண்சுனை முடிவிற்
பாடினி பாடும் வஞ்சிக்கு
நாடல் சான்ற மைந்தினாய் நினைக்கே” (6)
(புறம் 15)

**ஆற்றுப் படையில் கலைஞர்களின் வாழ்க்கைப் போக்கு:-**

பத்துப்பாட்டில் ஆற்றுப்படை இலக்கியங்களான பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, கூத்தராற்றுப்படை ஆகியவற்றுள் கலைஞர்களின் வாழ்க்கைப் போக்கு விரிவாகப் பேசப்பட்டுள்ளது. இசைக் கலைஞர்களின் வறுமையான தோற்றம், இசைக் கருவிகளின் அமைப்பு, அவற்றின் தன்மை, அவர்கள் செல்லும் வழியின் தன்மை, வழியில் பார்க்கப்படும் மக்களின் வாழ்விடம், அவர்களின் விருந்தோம்பல் பண்பு, செல்வமிகுந்த மன்னர்களின் அரண்மனை, அவர்கள் இரவலர்களையும், கலைஞர்களையும் உபசரிக்கும் மாண்பு ஆகியவை ஆற்றுப்படையில் காட்சிகளாக விவரிக்கப்பட்டுள்ளன.

(7)” பத்துப்பாட்டு ஆற்றுப்படை இலக்கியங்களுள் கலைஞர்களை பெரிதும் குறுநில மன்னர்கள் புரந்த பான்மையையே விரிவாகப் பேசுகின்றன. நான்கு ஆற்றுப்படைகளில் மூன்று ஆற்றுப்படைகள் குறுநில மன்னர்களிடத்தே கலைஞர்களை ஆற்றப்படுத்துகின்றன.” (7)

**கலைஞர்களின் பயன்படுத்திய இசைக்கருவிகள்:-**

1. பேரியாழ்
2. சீறியாழ்
3. மத்தளம்
4. சிறுபறை
5. கஞ்சதாளம்
6. கொம்பு வாத்தியம்
7. நெடு வங்கியம்
8. தூம்பு
9. புல்லாங்குழல்
10. கரடிகை
11. தடாரி

12. சல்லியம்
13. மாக்கிணை

**முடிவுரை:-**

புற இலக்கியத் துறைகளை தவிர்த்து, அக இலக்கியத் துறைகளிலும் கலைஞர்களின் பங்கு பேசப்பட்டுள்ளது.நாடோடி வாழ்க்கையை மேற்கொண்ட இவர்கள், வறுமைநிலையிலான, வாழ்க்கைப் போக்கினையே சந்தித்துள்ளனர். இவர்கள் போர்க்களத்திற்கும் சென்று மன்னர்களின் வீரத்தை பாடியுள்ளனர். பெண் கலைஞர்களும் போர்க்களம் சென்றுள்ளனர். சுற்றத்துடன் நாடோடி வாழ்க்கையை வாழ்ந்த இவர்கள், ஒரிடத்தில் நிலையான வாழ்க்கையை மேற்கொள்ளவில்லை.

**சான்றெண் விளக்கம்:-**

1. பக்தவத்சல பாரதி - தமிழகத்தில் நாடோடிகள் ப.48
2. தொல்காப்பியம் பொருள் ப.312
3. மேலது ப.302
4. புறநானூறு கழக வெளியீடு ப.183
5. பக்தவத்சல பாரதி தமிழகத்தில் நாடோடிகள் ப.49.
6. புறநானூறு கழக வெளியீடு, ப.41
7. நாடோடிகள் பக்க 57.